

திருவெண்ணைநல்லூர் ஒன்றியம் மேலமங்கலம் ஊராட்சியில் நடைபெற்ற வாக்காளர் பெயர் சேர்த்தல் சிறப்பு முகாமை வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி , மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன் , மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றியச் செயலாளர் பி.வி.ஆர்.சு. விசுவநாதன், ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல் உடனிருந்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியும், அரசியல் மாமேதையுமான முரசொலி மாறன் அவர்கள் நினைவு நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்ட முரசொலி மாறன் திருவுருவப் படத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், வீட்டுவசதி, மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான சு.முத்துசாமி தலைமையில் கழக மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வார்டு, கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் சார்பில்

# உடுமலைப்பேட்டையில் - பெட்ரோல், டீசல் விற்பனை நிலையம்!

## அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன் – மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தனர்!

கோவை, நவ.26 -

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் உடுமலைப் பேட்டையில், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், கோயம்புத்தூர் மண்டலத்தில் 9ஆவது பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையத்தை திறந்து வைத்தார்கள்.

அதன் விபரம் வருமாறு:-

கூட்டுறவுத்துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மூலம் கோயம்புத்தூர் மண்டலத்திம், உடுமலைப்பேட்டையில் 10,000 சதுர அடி காலியிடத்தில் ரூ.1.80 கோடி செலவில் பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையம் அமைக்க இந்தியன் ஆ யி ல் நிறுவனத்தினத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் நிறைவுற்றுள்ளது.

இப்பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையம் 20,000 லிட்டர் பெட்ரோல் மற்றும் 20,000 லிட்டர் டீசல் கையாளக்கூடிய திறன் கொண்டது. விற்பனை நிலையத்தில் 4 பெட்ரோல் நாசிலும் மற்றும் 4 டீசல் நாசிலும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த பெட்ரோல், டீசல் விற்பனை நிலையமானது தமிழகம் முழுவதும், கூட்டுறவுத்துறை மூலம் நடத்தப்படும் 58--வது விற்பனை நிலையமாகும். மேலும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தால் நடத்தப்படும் 9-வது பெட்ரோல் , டீசல் விற்பனை நிலையமாகும். 2023--24 நிதியாண்டில் தமிழகம் முழுவதும் கூட்டுறவுத்துறை மூலம் நடத்தப்படும் பெட்ரோல், டீசல் விற்பனை நிலையங்களில் ரூ.807.63 கோடி மதிப்பிற்கு விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 31.10.2024 வரை பெட்ரோல் மற்றும் டீசல் ரூ.452.74 கோடி மதிப்பிற்கு விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலம் உடுமலைப் பேட்டையில் அமைக்கப்பட்டுள்ள இந்த பெட்ரோல், டீசல் விற்பனை நிலையத்தின் மூலம் உடுமலை, கல்பனா ரோடு, ஜி.எச். சாலை, வ.உ.சி. வீதி, பசுபதி வீதி, சீனிவாசன் வீதி, வக்கீல் நாகராஜன் வீதி, பாபுகான் வீதி, கபூர் கான் வீதி, ராஜேந்திரன் ரோடு, சந்தை தளி ரோடு, சரவணா வீதி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பயனடைவார்கள். பெட்ரோல், டீசல் விற்பனை நிலையத்தில் தினசரி சராசரியாக 1000 லிட்டர் டீசல், மற்றும் 1500 முதல் 2000 லிட்டர் வரை பெட்ரோல் விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### கழக இளைஞரணி செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா !

# புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவீர்!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!



புதுக்கோட்டை, நவ. 26 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் அறிக்கை வருமாறு:

கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர், அவர்களின் பிறந்த நாள் நாளை (27.11.2024 - புதன்கிழமை) ஆகும். தமிழ் சமுதாயம் தமிழ் மொழி என்கிற உணர்வு பெற்றிட உழைத்த தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் கொள்கைகளையும், லட்சியங்களையும் உள்ளத்தில் ஏந்தி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழியில் ஓய்வின்றி பணியாற்றி வரும் இளம் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழாவினை மிகுந்த எழுச்சியோடு, ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல், விளையாட்டு போட்டிகளை நடத்துதல், இரு வண்ணக் கொடியினை உயர்த்தி வைத்து இனிப்புகள் வழங்குதல் என புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் , உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் ஈடுபட வேண்டும். மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளைகள், வட்டங்கள், வார்டுகள் தோறும் மேற்கண்ட நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தனது அறிக்கையில் கூறி உள்ளார்.

### மாமன்ற உறுப்பினர் நா.சம்பத் ஏற்பாடு! கோவை – 35வது வார்டு

# அறிஞர் அண்ணா நகரில் மரக்கன்று நடும் விழா!

## வட்டச் செயலாளர் ஆர்.குமரன் தலைமை! வட்ட அவைத் தலைவர் சோ.துரைப்பாண்டியன் முன்னிலை!

கோவை, நவ. 26 -

கோவை வடக்கு மாவட்டம், கவுண்டம் பாளையம் பகுதி, 35 வது வார்டுக்கு உட்பட்ட அறிஞர் அண்ணா நகரில் மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது.

அமைச்சர் செந்தில் பாலாஜி ஆலோசனையின் பெயரில், வடக்கு மாவட்டச் செயலாளர் தோ.அ.ரவி வழிகாட்டுதலின்படி 35 வது வார்டின் மாமன்ற உறுப்பினர் நா. சம்பத் ஏற்பாட்டின் பேரில், 35 வது வட்டக் கழக செயலாளர் ஆர். கே.குமரேசன் தலைமையில், அவைத் தலைவர் சோ.துரை பாண்டியன் முன்னிலையில், பொதுமக்களோடு கலந்து கொண்ட கியர்ஸ் உரிமையாளர் சந்திரலிங்கம், மாநகராட்சி காண்ட்ராக்டர் ராஜன், சூப்பர்வைசர் ஆனந்த் மற்றும் துப்புரவு தொழிலாளர்கள் அனைவரும் பங்கேற்றனர்.

அறிஞர் அண்ணா நகரில் கம்பீர சித்தி விநாயகர் திருக் கோவிலுக்கு எதிர்ப்புறம் உள்ள காலியிடங்களில், நிழல் தரும் மரக்கன்றுகள் நடப்பட்டன.

இதில் கலந்து கொண்ட அனைத்து மாநகராட்சியின் தூய்மை தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் மாமன்ற உறுப்பினர் நா.சம்பத், உரிய மரியாதை செலுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

